முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1563

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.01.2024, செவ்வாய்கிழமை

1. தர்ம சக்திமிகு காவலனே
   தரணிகாக்க வந்த ஆறுமுகனே
   பெருமைகொண்டு என் அவதாரத்தில்
   பிரணவக்குடில் படைத்து நிகழ்த்துகின்ற குருராஜனே
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 24 ம் நாள், 09.01.2024, செவ்வாய்கிழமை)
   அறமாக அரங்கன் உன்னுள்
   வழிநடத்தி ஆறுமுகன் யான்
3. அறமாக உலகமெங்கும் சக்தி கூட்டி
   அற்புதமான ஞானப்படைகளெனும் உன் தொண்டர்களை
   தொண்டர்களை ஆறுமுகன் யான் வழி நடத்துகின்றேன்
   தேசிகன் உன் பேரில் நடக்கும் தர்மம் அத்தனையும்
4. உண்டாக்கும் உலகில் மாற்றம் தன்னை
   உயிர்கொலை நீக்கி உன்வழி வரும் மக்களெல்லாம்
   மக்களெல்லாம் என் கருணையாலே
   மண்ணுலகில் ஞானிகளாக உருவெடுத்து
5. தேக்கமின்றி ஞான யுகம் படைப்பர்
   தேசிகன் நீ விரும்பும் ஞான ஆட்சிக்காலம்
   ஆக்கமுடன் உலகமெங்கும் அரங்கேறும்
   அரங்கன் உன் ஞானமே இதற்கு வழிநடத்தும்
6. வரமாக உன் வழி வருகின்ற மக்களே
   வையகத்தை நல்வழி காட்டி ஆளுமையை
   ஆளுமையை ஞான ஆட்சியாக
   ஆறுமுகன் என் ஆசிகொண்ட சூட்சுமம் வழி

7. மாறுதலை உலகில் புரிவரப்பா
மாதவசி உன் வழி வந்தால்
இந்த அற்புதம் உலகத்தில் சடுதி நடக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–